செய்தி வெளியீடு எண்: 27 நாள்: 28.11.2020.

**தேனி மாவட்டம்**
**தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு) சார்பில்**
**வளம் சார்ந்த வங்கி கடன் திட்ட அறிக்கையினை**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்**
**வெளியிட்டார்:-**

********

தேனி மாவட்ட ஆட்சியரின் பெருந்திட்ட வளாகத்தில் அமைத்துள்ள ஒருங்கிணைந்த அலுவலக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சயில், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு) வங்கியின் சார்பில் 2021-22-ஆம் ஆண்டிற்கான ரூ.6787.47 கோடி மதிப்பிலான வளம் சார்ந்த வங்கி கடன் திட்ட அறிக்கையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்) வெளியிட்டு, தெரிவித்ததாவது,

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு) வங்கியின் சார்பில் ஆண்டுதோறும் வளம் சார்ந்த வங்கி கடன் திட்டத்தினை தயாரித்து வெளியிட்டு வருகிறது. தேனி மாவட்டத்திற்கு நடப்பு 2020-21-ஆம் நிதியாண்டிற்கு ரூ.5960.65 கோடி நிதி அறிக்கை வெளியிடப்பட்டது. அதனைத்தொடர்ந்து, எதிர் வருகின்ற 2021-22-ஆம் நிதியாண்டிற்கு ரூ.6787.47 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது நடப்பாண்டை காட்டிலும் வரும் நிதி ஆண்டிற்கான நிதி ஆற்றல் 13.9 சதவிகிதம் உயர்ந்துள்ளது. தேனி மாவட்டத்தை பொறுத்த வரை மொத்த நிதி ஆற்றல் ரூ.6787.47 கோடியில், வேளாண்மை மற்றும் இணை தொழில்களுக்கு ரூ.5462.51 கோடியும், (இதில் பயிர்கடன் மட்டும் ரூ.3079.75 கோடி) மற்றும் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு ரூ.1324.96 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நமது மாவட்டத்திற்கு திட்டமிடலுக்கு தேவையான உள்ளீடுகளை தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு) வங்கி பெற்று தந்துள்ளது. தேனி மாவட்டம் வேளாண் சார்ந்த மாவட்டமாகும், வேளாண்மை சார்ந்த பணிகள், பண்ணை இயந்திரமயமாக்கல், நீர் சேமிப்பு சாதனங்கள் மற்றும் கால்நடை பராமரிப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான நிதி ஆற்றல் கிடைக்கப்பெற்றுள்ளது.

மேலும், மத்திய அரசு வேளாண்மை அமைச்சகத்தின் கீழ் வேளாண் உள்கட்டமைப்பு நிதி மற்றும் சந்தைப்படுத்தல் உள்கட்டமைப்பிற்கான திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இதில் கிட்டங்கிகள் (500-5000 மெட்ரிக் திறன்), சிறிய குளிர் களஞ்சியங்கள் (30 மெட்ரிக் திறன்) ஏற்படுத்தப்படுகிறது. இதன் மூலம் தானியங்கள், பருப்பு வகைகளை தரம் பிரித்தல் மற்றும் வரிசைப்படுத்துதல் ஆகியவைகள் உள்கட்டடமைப்புகளிலிருந்த நாபார்டு வங்கியின் மூலம் கிடைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

எனவே, வேளாண்மை சந்தைப்படுத்தலுக்கான உள்கட்டமைப்புகளின் கீழ் கடன் வழங்குவதில் வங்கி மேலாளர்கள் கவனம் செலுத்திட வேண்டும். மேலும், முத்ரா கடன், தாட்கோ, பிற தொழில்கள் மேம்படுத்தும் வகையில் கடனுதவி கேட்டு வரும் விவசாயிகள், தொழில்முனைவோர்கள், சுய உதவிக்குழுவினர்களுக்கு அவர்களது மனுக்களை பரிசீலித்து கடனுதவிகள் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். இதன்மூலம் நமது மாவட்டத்தில் வேளாண் உற்பத்தி பொருட்கள் அதிக்கப்படுத்துவதுடன் வேலைவாய்ப்புகள் அதிக அளவில் ஏற்பட்டு வளர்ச்சி பாதையை அடைய முடியும் என தெரிவித்தார்.

இந்நிகழ்சியில், மகளிர் திட்ட அலுவலர் சிவக்குமார், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு) வங்கியின் உதவி பொது மேலாளர் எல்.புவனேஸ்வரி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் அகிலன், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் ராமசுப்பிரமணியன் மற்றும் வங்கியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**